<u>சுருக்கம்</u>

நெடுஞ்சாலைத் துறை– நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மாவட்ட முக்கியச் சாலைகளை மாநில நெடுஞ்சாலைகளாகவும், மாவட்ட இதரச் சாலைகளை மாவட்ட முக்கியச் சாலைகளாகவும் தரம் உயர்த்தி வகைப்படுத்துதல் – ஆணை– வெளியிடப்படுகிறது

---

நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்என்1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.161 — நாள் 03.05.2010

திருவள்ளுவர் ஆண்டு 2041,

சித்திரை 20

படிக்க:

1. தலைமைப்பொறியாளர் (பொது) அவர்கள் கடித எண்.8321/சாலை2/07, நாள் 11.02.2010.
2. தலைமைப்பொறியாளர் (பொது) அவர்கள் கடித எண்.8321/சாலை2/07, நாள் 18.03.10
3. தலைமைப்பொறியாளர் (பொது) அவர்கள் கடித எண்.8321/ சாலை2/07, நாள் 26.04.10

-----

**<u>ஆணை:</u>**

தமிழ்நாட்டில், தேசிய நெடுஞ்சாலைகள் நீங்கலாக நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் பின்வரும் சாலைகள் உள்ளன:–

| | |
|---|---|
| மாநில நெடுஞ்சாலைகள் | 9,384 கி.மீ. |
| மாவட்ட முக்கிய சாலைகள் (MDR) | 11,288 கி.மீ. |
| மாவட்ட இதர சாலைகள் (ODR)/ கரும்பு அபிவிருத்தி திட்ட சாலைகள் | 36,096 கி.மீ. |
| மொத்தம் | 56,768 கி.மீ. |

இவற்றுள், சில சாலைகளில் வாகனப் போக்குவரத்து செறிவு அதிகமாக இருப்பதாலும், பல்வேறு பிற காரணங்களின் அடிப்படையிலும் அச்சாலைகளின் வகைப்பாட்டினை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி தரம் உயர்த்த தலைமைப் பொறியாளர் (பொது) பரிந்துரை செய்துள்ளார்:–

1) தற்போது இரு வழித்தடங்களாக உள்ள சாலைகள்.
2) சாலையின் மொத்த அகலம் 12.0 மீட்டருக்கு குறையாமல் உள்ளவை.
3) தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் பிற மாநில நெடுஞ்சாலைகளுடன் இணைக்கும் சாலைகள், மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் மாநிலத்திற்குள் உள்ள முக்கிய நகரங்கள் ஆகியவற்றை இணைக்கும் சாலைகள்.
4) சாலைகளின் போக்குவரத்துச் செறிவு 6000 பயணியர் அலகுக்கு PCU குறையாமல் உள்ளவை.

5) சாலை தொடர்ச்சியான தன்மையுடன் இருத்தல் வேண்டும். இச்சாலை ஒன்றிற்கும் மேற்பட்ட கோட்டத்தின் கட்டுப்பாட்டில் இருந்தால் சாலையின் முழு நீளமும் தரம் உயர்த்தப்பட பரிசீலிக்கப்படும்.
6) சாலை தொகுப்பானது வெவ்வேறு வகைப்பாட்டினை சார்ந்தவையாக இருப்பின், அவற்றை ஒருங்கிணைத்து உயர் தர சாலையாக தரம் உயர்த்தி வகைப்படுத்தலாம்.
7) பன்மாநில இணைப்புச் சாலைகள்.
8) தொழிற்சாலை பகுதிகளில் அமைந்துள்ள சாலைகள்.

2. இவ்வரையறைகளின் அடிப்படையில் தலைமைப்பொறியாளர் (பொது) அவர்கள் கீழ்கண்டவாறு சாலைகளின் வகைப்பாட்டை மாற்றியமைக்க கருத்துரு அனுப்பியுள்ளார்.

| வ.எண். | வகைப்பாடு | சாலைகளின் எண்ணிக்கை | நீளம் (கி.மீ) |
|---|---|---|---|
| 1. | மாவட்ட முக்கியச் சாலைகளிலிருந்து மாநில நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்துதல் | 35 | 1164.79 |
| 2. | மாவட்ட இதரச் சாலைகளை மாவட்ட முக்கியச் சாலைகளாக தரம் உயர்த்துதல் | 102 | 995.50 |

மேலும், நெடுஞ்சாலைத்துறையின் கீழ் உள்ள சாலைகளை தரம் உயர்த்தி வகைப்படுத்தினால் கீழ்கண்டவாறு சாலைகளின் நீளம் அமையும் என்றும் தலைமைப்பொறியாளர் (பொது) தெரிவித்துள்ளார்.

| வ. எண். | சாலைகளின் வகைப்பாடு | தற்போதைய நீளம் (கி.மீ) | தரமுயர்த்தப்பட்ட பின்னர் உள்ள நிலை நீளம் (கி.மீ) |
|---|---|---|---|
| 1. | தேசிய நெடுஞ்சாலைகள் | 4873 | 4873 |
| 2. | மாநில நெடுஞ்சாலைகள் | 9384 | 10549 |
| 3. | மாவட்ட முக்கியச் சாலைகள் | 11288 | 11315 |
| 4. | மாவட்ட இதரச் சாலைகள், கரும்பு அபிவிருத்தி திட்ட சாலைகள் | 36096 | 34937 |

3. இவ்வாறு சாலைகளை தரம் உயர்த்துவதால் இச்சாலைகளின் தரம் மேம்பட்டு இருக்கும். மேலும், இச்சாலைகளால் இணைக்கப்படும் கிராமங்கள் மற்றும் நகரங்கள் முக்கியத்துவம் பெறும். மேலும் பல்வேறு வகைப்பாடுடைய சாலைகளை ஒருங்கிணைத்து தரம் உயர்த்துவதால் வெவ்வேறு இனங்களில் உள்ள சாலைகள் தரம் உயர்த்தப்பட்டு வேறுபாடுகள் களையப்படும். உயர்வகைப்பாடுடைய சாலைகள் மட்டுமே சில குறிப்பிட்ட திட்டங்களின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுவதால் இவ்வாறு தரம் உயர்த்தப்படும் சாலைகளும் அத்திட்டங்களின் கீழ் இடம் பெறும் வாய்ப்பு ஏற்படுவதோடு, அச்சாலைகளை அகலப்படுத்துவதற்கும் வாய்ப்பு அதிகமாக ஏற்படும் என்று தலைமைப்பொறியாளர் (பொது) தெரிவித்துள்ளார். மேலும், சாலைகளை தரம் உயர்த்துவதற்கான வரையரைகளின்படி, மேற்படி மாவட்ட முக்கியச் சாலைகளை, மாநில நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்த ஆண்டுக்கு ரூ.59 இலட்சங்களும், மாவட்ட இதரச் சாலைகளை, மாவட்ட முக்கியச் சாலைகளாக தரம் உயர்த்த ரூ.277 இலட்சங்களும் நிதி

ஒதுக்கீடு தேவைப்படும். எனினும், கூடுதல் நிதிகள் ஏதும் கோரப்படாமல் திட்டம் சாரா பணிக்கு ஒதுக்கிய நிதியிலேயே இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என தலைமைப்பொறியாளர் (பொது) தெரிவித்துள்ளார்.

4. தலைமைப்பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத்துறை அவர்களின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, தலைமைப்பொறியாளரின் கருத்துருவினை ஏற்று, இணைப்பில், பிற்சேர்க்கை I இல் உள்ள 35 மாவட்ட முக்கியச் சாலைகளை மாநில நெடுஞ்சாலைகளாகவும், பிற்சேர்க்கை II இல் உள்ள 102 மாவட்ட இதரச் சாலைகளை மாவட்ட முக்கியச் சாலைகளாகவும் தரம் உயர்த்தி ஆணையிடுகிறது.

5. மேலும் சாலைகளின் வகைப்பாட்டை மாற்றுவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை 2010–2011 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் உள்ள நிதி ஒதுக்கீட்டிற்குள் மேற்கொள்ள வேண்டும் என்று தலைமைப்பொறியாளர் (பொது) அவர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா.கு.எண்.254/DS(VP)/பொ.ப.1/10, நாள் 30.04.2010–இன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ.சந்தானம்
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>

தலைமைப்பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத்துறை, சென்னை–5
தலைமைப்பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), சென்னை–5
தலைமைப்பொறியாளர் (நெ) திட்டங்கள், சென்னை–15
தலைமைப்பொறியாளர் (நெ) நபார்டு (ம) கிராமச்சாலைகள், சென்னை–32
தலைமைப்பொறியாளர் (பணிகள்) தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம்
சென்னை–20
தலைமைப்பொறியாளர் (நெ) ஆய்வு (ம) வடிவமைப்பு, சென்னை–32
இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், சென்னை–32
மாநில கணக்காயர், சென்னை–18/35
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், தெற்கு/கிழக்கு/வடக்கு, சென்னை

<u>நகல்:</u>

முதலமைச்சர் அலுவலகம், தலைமைச்செயலகம், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
செயலாளரின் தனிச்செயலர், நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9
தேசிய தகவல் மையம் (NIC), சென்னை–9.
நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறையின் அனைத்து பிரிவுகள், சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்